FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313291

1. District மாவட்டம் : Tirupathur PS: காவல்நிலையம் Vigilance & Anti-Corruption Year: ஆண்டு 2026 FIR No.: முத.அ. எண் 8/2026 Date: நாள் 13.10.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act-16 of 2018) Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 17.07.2026 Date to : நாள் வரை 05.10.2026
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.00 hrs 12.30 hrs Time to : நேரம் வரை 13.30 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.10.2026 Time : நேரம் 13.40 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-II 479789 Time : நேரம் 22.00 Hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Oral

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Office of the Tamil Nadu Generation & Distribution Corporation, Ambur, Tirupathur District. 38 km, North
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. S. Parveen Banu (b) Father's/ Husband's Name : Sharif Basha
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 30 yrs நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : House wife தொழில் (g) Address : முகவரி No 121, 3rd Street, K.K. Nagar, Thorappadi, Vellore. PH. 6383615143

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Sivakumar, Foreman, Tamil Nadu Generation and Distribution Corporation, Ambur, Tirupathur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
The informant was not able to arrange the demanded sum of Rs. 10,000/-, hence the delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S-Parveen Banu

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 13.10.26

13/10/2026
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.10.2026 at 23:00 Hrs

Name: பெயர் B. Gowri
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Tirupathur

Attachment for Column No.12 of First Information Report in Tirupathur Vigilance and Anti-Corruption Cr.No.08/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் B.கௌரி ஆகிய நான், இன்று 13.10.2026-ஆம் தேதி பகல் 13.40 மணியளவில், திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, வேலூர், தொரப்பாடி, கே.கே. நகர், 3-வது தெரு, கதவு எண்.121-ல் வசிக்கும் திருமதி.S.பர்வீன் பானு, வயது 30/2026, க/பெ.ஷரீப் பாஷா என்பவர் நேரில் ஆஜராகி, ஆம்பூர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் போர்மேனாகப் பணிபுரியும் திரு.சிவகுமார் என்பவர் மீது வாய்மொழியாகப் அளித்த புகார் வாக்குமூலத்தை 14.00 மணி முதல் 15.00 மணி வரை எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்து, அவரிடம் படித்துக் காட்டியபோது, அதன் விவரங்கள் சரியாக உள்ளதாக ஒப்புக்கொண்டார். தொடர்ந்து, புகார்தாரரின் பின்னணி மற்றும் எதிரியான திரு.சிவகுமார், போர்மேன் என்பவரது முன்நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதில், புகார்தாரருக்கு எதிரியின் மீது தனிப்பட்ட விரோதம் ஏதும் இல்லை என்பதும், எதிரியான ஆம்பூர் மின்வாரிய போர்மேன் திரு.சிவகுமார் பொதுமக்களிடம் மின் இணைப்பு வழங்குவது சம்மந்தமாக லஞ்சம் கோரி பெறுவதாகத் தெரியவந்தது. மேலும், 05.10.2026 அன்று மதியம் 13.50 மணி முதல் 14.44 மணி வரை புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின்போது நடந்த உரையாடலை, திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவின் உதவி ஆய்வாளர் திரு.M.கணேசன் அவர்களின் உதவியுடன், இப்பிரிவுக்குச் சொந்தமான Sony குரல் பதிவுக் கருவியில் பதிவு செய்யப்பட்ட உரையாடலைக் கேட்டுப் பரிசீலித்ததில், புகார்தாரரின் தந்தையின் வீட்டிற்கு மின்சார சேவை இணைப்பு பெற்றுத் தருவதற்காக எதிரி திரு.சிவகுமார், போர்மேன் என்பவர் புகார்தாரர் திருமதி.S.பர்வீன் பானு அவர்களிடம் ரூ.10,000/- லஞ்சமாகக் கேட்டதும், அத்தொகையைத் தனது மனைவியின் வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்டுள்ள

7010814348 என்ற கைப்பேசி எண்ணின் மூலம் செலுத்துமாறு வலியுறுத்தியதும் தெரியவந்தது. புகார்தாரர் அளித்த வாக்குமூலம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட இரகசிய விசாரணையில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில். எதிரி திரு.சிவகுமார், போர்மேன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், ஆம்பூர் என்பவர் மீது, திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.08/2026 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018) யின் கீழ், இன்று 13.10.2026- ந்தேதி 22.00 மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் அளித்த புகார் வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு: நான் மேலே சொன்ன முகவரியில் என் குடும்பத்தோடு வசித்து வருகிறேன். எனக்கு கல்யாணமாகி இரண்டு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்க ஓரளவுக்கு தெரியும் அவ்வளவாக எழுத வராது. நான் வீட்டில் இருந்து குடும்பத்தை கவனித்து வருகிறேன். என் அப்பா பெயர் அஸ்கர் அலி. எனக்கு இப்ராஹிம் என்ற ஒரு தம்பி இருக்கிறார். என் தம்பி கடந்த ஆறு வருஷமாக துபாயில் ஒரு சாக்லேட் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். அவர் வருஷத்துக்கு ஒருமுறை ஒரு மாதம் லீவில் ஊருக்கு வந்து எங்களைப் பார்த்துவிட்டுத் திரும்பி துபாய்க்குப் போய்விடுவார். எங்க அப்பா ஆம்பூர் டவுனில் என் அம்மாவுடன் வசித்து வருகிறார். சுமார் ஆறு வருஷத்துக்கு முன்னாடி நானும் எங்க அப்பாவும் சேர்ந்து ஆம்பூர், இரண்டாவது தாரவள்ளி, 7-வது தெருவில் இரண்டு வீட்டுமனைகள் வாங்கினோம். அதில் ஒரு மனையை என் பெயரிலும், இன்னொரு மனையை எங்க அப்பா பெயரிலும் வாங்கினோம். கடந்த வருஷம் ஆகஸ்ட் மாதம் நானும் எங்க அப்பாவும் அவரவர் இடத்தில் வீடு கட்ட ஆரம்பித்தோம். எங்க அப்பாவுக்கு உடம்பு சரியில்லாததால் அவரால் வெளியே போய் வீடு கட்டும் வேலையைக் கவனிக்க முடியவில்லை. அதனால், என் வீட்டைக் கட்டும் வேலையையும், எங்க அப்பா பெயரில் உள்ள இடத்தில் கட்டிய வீட்டின் வேலையையும் நானே இருந்து கவனித்து வந்தேன். வீடு கட்டுவதற்குத் தேவையான பணத்தை என் தம்பி துபாயிலிருந்து அனுப்பி வந்தார். இரண்டு வீடுகளையும் கட்டி

முடிக்க இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஆகிவிட்டது. என் வீட்டுக்கு ஏற்கனவே மின் இணைப்பு வாங்கிவிட்டேன். ஆனால், எங்க அப்பா பெயரில் உள்ள இடத்தில் கட்டிய வீட்டுக்கு மட்டும் மின் இணைப்பு வாங்கவில்லை. அந்த வீட்டுக்கு மின் இணைப்பு வாங்குவதற்காக, போன ஜூலை மாதம் முதல் வாரத்தில் ஒரு நாள் மின்வாரியத்தில் லைன்மேனாக வேலை செய்யும் பிரபு என்பவர் எங்க வீட்டுக்கு வந்தார். அவர் எங்க அப்பாவின் ஆதார் அட்டை நகல், புகைப்படம் மற்றும் வீட்டு ஆவண நகல்களை வாங்கிச் சென்றார். ஏற்கனவே என் வீட்டுக்கும் அவர்தான் ஆவணங்களை வாங்கிச் சென்று மின் இணைப்பு வாங்கிக் கொடுத்தார். அதற்குப் பிறகு சுமார் 10 நாட்கள் கழித்து, ஆம்பூர் மின்வாரிய அலுவலகத்தில் போர்மேனாக வேலை செய்யும் சிவக்குமார் என்பவர் என் செல்போனுக்குப் போன் செய்தார். அப்போது எங்க அப்பா பெயரில் உள்ள வீட்டுக்கு மின் இணைப்பு வாங்குவது சம்பந்தமாக அலுவலகத்துக்கு வந்து தன்னைப் பார்க்கும்படி சொன்னார். அவர் சொன்னபடி, 17.07.2026 அன்று பகல் சுமார் 12.00 மணிக்கு ஆம்பூர் மின்வாரிய அலுவலகத்துக்குப் போய் சிவக்குமாரைப் பார்த்தேன். அப்போது அவர், எங்க அப்பா பெயரில் உள்ள வீட்டுக்கு மின் இணைப்பு கொடுக்க அவருக்கு தனியாக ரூ.40,000 பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நான், எங்க குடும்பம் கஷ்டப்படுகிற குடும்பம், அவ்வளவு பணமெல்லாம் எங்களிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர், சரி, கடைசியாக ரூ.30,000 கொடுத்தால் தான் மின் இணைப்பு கிடைக்கும் என்று சொன்னார். எப்படியாவது எங்க அப்பா வீட்டுக்கு மின் இணைப்பு வாங்கிவிட வேண்டும் என்று நினைத்தேன். அதனால், வேறு வழியில்லாமல் அன்றைக்கு என்னிடம் இருந்த ரூ.18,500 பணத்தை அவரிடம் நேரில் கொடுத்தேன். அப்போது அவர், மீதமுள்ள பணத்தில் ரூ.1,500-ஐ வீட்டுக்குப் போனதும் போன் மூலம் அனுப்பிவிடும்படியும், மின் இணைப்பு கொடுத்த பிறகு மீதமுள்ள ரூ.10,000-ஐ கொடுக்கும்படியும் சொன்னார். அதனால், அன்றைக்கு பகல் சுமார் 12.30 மணிக்கு ஆம்பூரில் உள்ள எங்க அப்பா வீட்டுக்குப் போனேன். அங்கிருந்து என் செல்போன் மூலம் ரூ.1,500-ஐ, சிவக்குமார் சொன்ன 7010814348 என்ற செல்போன் எண்ணுக்கு அனுப்பிவிட்டேன். ஆனால், அதற்குப் பிறகும் எங்க அப்பா

வீட்டுக்கு மின் இணைப்பு கொடுக்கவில்லை. சுமார் ஒரு மாதம் கழித்து சிவக்குமார் எனக்குப் போன் செய்தார். அப்போது, எங்க அப்பா வீட்டின் மேலே மின் கம்பி செல்வதால் JE மின் இணைப்பு கொடுக்க மறுப்பதாகச் சொன்னார். மேலும், ஒரு பெரிய அதிகாரியை அழைத்துக்கொண்டு வந்து வீட்டைக் காண்பித்து மின் இணைப்பு வாங்கித் தருவதாகவும் சொன்னார். அந்தச் சமயத்தில் நான் வேலூரில் என் கணவர் வீட்டில் இருந்தேன். அதனால், சிவக்குமார் சொன்ன விவரத்தை என் அம்மாவிடம் தெரிவித்தேன். அப்போது சிவக்குமார், தன்னுடன் வந்திருக்கும் பெரிய அதிகாரிக்குக் கொடுக்க ரூ.5,000 வேண்டும் என்று என்னிடம் சொன்னார். அதனால், அந்தப் பணத்தைக் கொடுக்கும்படி என் அம்மாவிடம் சொன்னேன். என் அம்மா எங்க அப்பா வீட்டுக்குப் போனபோது, அங்கு நான்கு அல்லது ஐந்து அலுவலர்கள் இருந்திருக்கிறார்கள். அப்போது என் அம்மா முதலில் சிவக்குமாரிடம் ரூ.3,000 கொடுத்திருக்கிறார். அதற்கு சிவக்குமார், பெரிய அதிகாரி ரூ.3,000 வாங்க மாட்டார், ரூ.5,000 கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதன்பிறகு என் அம்மா மீதமுள்ள ரூ.2,000 பணத்தையும், சிவக்குமாரிடம் என் அம்மா எங்களது பழைய வீட்டில் வைத்து அவரிடம் கொடுத்திருக்கிறார். மேலும், எங்க அப்பா பெயரில் உள்ள வீட்டுக்கு மின் இணைப்பு வாங்குவதற்கான ஆவணங்களைக் கொடுத்ததிலிருந்து JE நடராஜன் என்பவர் எங்க வீட்டுக்கு வந்து பார்த்துவிட்டுச் செல்வார். நானும் அவரிடம் 9344465573 என்ற செல்போன் எண்ணில் அடிக்கடி பேசியிருக்கிறேன். எங்க அப்பா வீட்டுக்கு மின் இணைப்பு கிடைக்காததால், நான் அடிக்கடி துபாயில் இருக்கும் என் தம்பி இப்ராஹிமிடம் இதுபற்றி சொல்லி வந்தேன். இவ்வளவு பணம் கொடுத்தும் இன்னும் மின் இணைப்பு கிடைக்கவில்லையே என்று என் தம்பி மிகவும் வருத்தப்பட்டார். கடந்த 01.10.2026 அன்று அவர் வாட்ஸ்அப் மூலம் விஜிலன்ஸ் அலுவலகத்துக்குப் புகார் அனுப்பியதாக என்னிடம் சொன்னார். அதன்பிறகு, கடந்த 05.10.2026 அன்று பகல் நேரத்தில் என் தம்பி எனக்குப் போன் செய்தார். அப்போது ஆம்பூரில் உள்ள எங்க அப்பா வீட்டுக்கு விஜிலன்ஸ் அலுவலர் வருவார் என்றும், அவரிடம் நடந்த விவரங்களைச் சொல்லி விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி

சொன்னார். அதன்படி நான் எங்க அப்பா வீட்டில் இருந்தபோது விஜிலன்ஸ் அலுவலர் ஒருவர் அங்கு வந்து என்னிடம் விசாரித்தார். சிவக்குமார் லஞ்சம் கேட்பதை உறுதி செய்வதற்காக, ஒரு சிறிய வாய்ஸ் ரெக்கார்டரை என்னிடம் கொடுத்து, அதை எடுத்துக்கொண்டு சிவக்குமாரிடம் பேசிவிட்டு வரும்படி சொன்னார். அதன்படி, 05.10.2026 அன்று பகல் சுமார் 1.30 மணிக்கு அந்த வாய்ஸ் ரெக்கார்டரை எடுத்துக்கொண்டு ஆம்பூர் மின்வாரிய அலுவலகத்துக்குப் போய் சிவக்குமாரிடம் பேசினேன். அப்போது அவர், எங்க அப்பா பெயரில் உள்ள வீட்டின் மேலே மின் கம்பி செல்வதால் JE மின் இணைப்பு கொடுக்க மறுப்பதாகச் சொன்னார். மேலும், அந்த இடத்தை இரண்டாகப் பிரித்து, ஒரு பகுதியை என் பெயரிலும் இன்னொரு பகுதியை எங்க அப்பா பெயரிலும் பத்திரம் எழுதினால், எங்க அப்பா வீட்டுக்கு மின் இணைப்பு வாங்கித் தருவதாகச் சொன்னார். அதற்கு ரூ.10,000 பணம் கொடுக்க வேண்டும் என்றும், அந்தப் பணத்தை ஏற்கனவே நான் பணம் அனுப்பிய 7010814348 எண்ணிற்கே Gpay யில் பணம் அனுப்ப சொன்னார். நான் அதில் நிர்மலா என்பவர் பெயர் வருகிறதே என்று கேட்க ஆமாம் அவர் தன்னுடைய மனைவிதான் என்றும் அவருடைய அக்கவுண்டிற்கே அந்த பணத்தை அனுப்புமாறு சொன்னார்.அப்போது நான், சரி, பிறகு வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். வெளியே இருந்த விஜிலன்ஸ் போலீசிடம் அந்த வாய்ஸ் ரெக்கார்டரைக் கொடுத்து சிவக்குமார் மேலும் ரூ.10000/- கேட்கிறார் என்று சொன்னேன். அதற்கு அவர் உங்களுக்கு புகார் கொடுக்க விருப்பமிருந்தால் பணம் ரூ.10000/- த்துடன் திருப்பத்தூர் விஜிலென்ஸ் அலுவலகம் வந்து அதிகாரிகளை சந்திக்குமாறு அறிவுறுத்தினார். இது தொடர்பாக என் தம்பியிடம் தகவல் தெரிவிக்க அவரும் பணம் ஏற்பாடு செய்யமுடியாத நிலையில் இருந்ததால் என்னுடைய நகையை அடமானம் வைத்தாவது பணத்தை ரெடிபண்ணிக்கிட்டு விஜிலன்ஸ் போலீசிடம் புகார்கொடுக்குமாறு என்னிடம் தெரிவித்தார். அதன்படி நான், என்னுடைய கம்மலை நேற்று (12.10.2026) ஆம் தேதி வேலூரில் உள்ள நகை அடகுக் கடையில் ரூ.10,000-க்கு அடகு வைத்து, அந்தப் பணத்தை என்னுடைய வங்கிக்

கணக்கில் செலுத்திக்கொண்டேன். தற்போது அந்த பணம் என்னுடைய வங்கி கணக்கில் உள்ளது. சிவக்குமார் அவர்கள் கேட்டபடி அவருக்கு இலஞ்சமாக பணம் கொடுத்து என் அப்பாவின் வீட்டிற்கு மின்இணைப்பு வாங்க விருப்பமில்லை. அதனால் என்னிடம் லஞ்சம் கேட்ட சிவக்குமார் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டி, இன்று 13.10.2026 திருப்பத்தூர் விஜிலன்ஸ் அலுவலகத்துக்கு நேரில் வந்து புகார் வாக்குமூலம் கொடுக்கிறேன். நான் சொன்ன விவரங்களை அப்படியே பதிவு செய்தீர்கள். படிக்கக்கேட்டேன் சொன்னபடி சரியாக உள்ளது. (Sd.xxx) Parveen Banu. 13.10.2026.

Sir,

A discreet verification was conducted regarding the antecedents of the informant and the general reputation of AO Tr.Sivakumar, Foreman and it is found that the informant had no personal motive against AO and the general reputation of AO Tr.Sivakumar is learnt to be not good. The contents of the Voice recorder were copied to a Compact Disc (CD) and its HASH VALUE noted.

Based on the contents of the statement of Tmt.S.Parveen Banu, a case in Tirupathur Vigilance and Anti-Corruption Cr.No.8/2026 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018), on 13.10.2026 at 22.00 hrs. The original statement of Tmt.S.Parveen Banu, along with the FIR, CD and Certificate under Section 63(4)(c) BSA, 2023 were sent to the Hon'ble Court of the District and Sessions Judge, Tirupathur and the remaining copies were sent to the officers concerned.

13/10/2026
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Tirupathur

Encl:
1. One Compact Disc (CD)
2. Certificate under Section 63(4)(c) BSA, 2023